## ஒரு பார்வை - பகுதி 1

**குர்ஆனை ஓதுங்கள்; தொழுகையை நிலைநாட்டுங்கள். தொழுகை ஒருவரை வெட்கக்கேடான, தீய செயல்களில் இருந்து பாதுகாக்கிறது. ஒவ்வொரு ஆத்மாவும் மரணத்தைச் சுவைத்தே தீரும். இவ்வுலக வாழ்க்கை என்பது வீணானதும், கேளிக்கை நிறைந்ததுமாகும். பாரசீகர்களுக்கு எதிரான ரோமானியர்களின் வெற்றியின் முன்னறிவிப்புடன் ஸூரா அர்ரூம் தொடங்குகிறது.**

## தராவிஹ் - 17: (ரக்அத் 1 முதல் 4)

### ஸூரா - 29, அல்அன்கபூத்; வசனம்: 45 - 69; பிரிவு: 5 - 7

1. **குர்ஆனை ஓதுங்கள்; தொழுகையை நிலைநாட்டுங்கள். நிச்சயமாக தொழுகையை நிறைவேற்றுவதுதான், மானக்கேடான மற்றும் தீமையான காரியத்தை விட்டும் தடுப்பதற்கான ஒரே வழி. அல்லாஹுவை திக்ரு - நினைவு கூறுவது மிகப் பெரிய நன்மையான காரியம். (ஸூரா - அல்அன்கபூத்; பிரிவு: 5)**

2. **நபியே! இதற்கு முன் எந்த வேதத்தையும் நீர் படித்திருக்கவில்லை. எதையும் எழுதிக்கொண்டிருக்கவுமில்லை. அப்படியிருந்தால், வீணர்கள் உம்மீது சந்தேகம் கொண்டிருப்பர். (ஸூரா - அல்அன்கபூத்; பிரிவு: 5)**

3. **"இறைநம்பிக்கை கொண்ட என் அடியார்களே! எனது பூமி விசாலமாக உள்ளது. ஆகவே, அதில் எங்கு சென்றாலும் என்னை வணங்குங்கள்". (ஸூரா - அல்அன்கபூத்; பிரிவு: 6)**

4. **மேலும், ஒவ்வொரு ஆன்மாவும் மரணத்தைச் சுவைத்தே தீரும். பிறகு மறுபடியும் நம்மிடமே நீங்கள் கொண்டுவரப்படுவீர்கள். (ஸூரா - அல்அன்கபூத்; பிரிவு: 6)**

5. **எத்தனையோ உயிரினங்கள் தம் உணவைச் சுமந்து செல்லவில்லை. அல்லாஹ் உங்களுக்கு உணவு வழங்குவது போல அவற்றுக்கும், உங்களுக்கும் அல்லாஹ்தான் உணவளிக்கிறான். அவன் நன்கு கேட்பவனாகவும், நன்கறிந்தவனாகவும் இருக்கின்றான். (ஸூரா - அல்அன்கபூத்; பிரிவு: 6)**

6. **அல்லாஹ், தான் நாடியவர்களுக்கு செல்வங்களை விசாலமாகவும், தான் நாடியவர்களுக்கு அளவோடும் வழங்குகின்றான். நிச்சயமாக அல்லாஹ் எல்லா விஷயங்களையும் நன்கு அறிந்தவனாக இருக்கின்றான். (ஸூரா - அல்அன்கபூத்; பிரிவு: 6)**

7. **இவ்வுலக வாழ்க்கை என்பது வீணானதும், கேளிக்கை நிறைந்ததுமாகும். நிச்சயமாக மறுமை வாழ்வு, அவர்கள் அறிந்திருந்தால் அதுதான் உயிரோட்டமானது. (ஸூரா - அல்அன்கபூத்; பிரிவு: 7)**

## ஸூரா - 30, அர்ரூம்; வசனம்: 1 - 19; பிரிவு: 1 - 2

8. **அலிஃப், லாம், மீம்! ரோம் நாட்டவர்கள் அருகிலுள்ள பூமியில் தோற்கடிக்கப்பட்டனர். ஆனால் அவர்கள் தங்கள் தோல்விக்குப் பின் விரைவில் வெற்றியடைவார்கள். (ஸூரா - அர்ரூம்; பிரிவு: 1)**

(பின்னணி: *இந்த ஸூரா கி.பி 615ம் ஆண்டு இறங்கியது. அப்போது சிலைகளை வணங்கிக்கொண்டிருந்த பாரசீகர்கள், ரோமாபுரியை ஆண்ட கிருஸ்தவர்களை போரில் வெற்றி கொண்டார்கள். அந்த நேரத்தில் பாரசீகர்கள் ஆட்சி, மிக வலிமையாக இருந்தது. இந்த வசனத்தில் அல்லாஹ் ரோமானியர்கள் மீண்டும் (3 - 9 ஆண்டு காலத்தில்) வெற்றி*

*பெறுவார்கள் என முன்னறிவிப்பு செய்கிறான். அப்போது இந்த செய்தி நம்பமுடியாமல் இருந்தது. ஏனெனில், ரோமானிய அரசு மிக வலுவிழந்திருந்தது. ஆனால் அது கி.பி 622ல் உண்மையானது. ரோமாபுரியை ஆண்ட சீசர் மன்னன் (ஹிராகுலிஸ்) பாரசீகத்தின் மீது போர் தொடுத்தார். அதிலிருந்து 2 - 3 ஆண்டுகளில் பாரசீகத்தின் உட்பகுதி முழுவதையும் கைப்பற்றினார்*).

9. **எப்போதும் வெற்றி தோல்வி குறித்த அதிகாரம் அல்லாஹ்வுக்குத்தான். ரோமர்கள் வெற்றி பெறும் அந்நாளில் முஃமின்கள் மகிழ்ச்சியடைவார்கள் (ரோமர்களின் வெற்றியானது சிலை வழிபாட்டின் தோல்வியாகும்). அல்லாஹ் தான் நாடியவர்களுக்கு உதவி செய்வான். அவன் யாவரையும் மிகைத்தவன்; மிக்க கிருபையுடையவன். (ஸூரா - அர்ரூம்; பிரிவு: 1)**

## ஒரு பார்வை - பகுதி 2

**மனிதனின் படைப்பு, மனிதனுக்கு துணையை வழங்கியது, மழை பொழியச் செய்தது, மின்னலைக் காட்டியது மற்றும் வானங்களையும், பூமியையும் நிலைநிறுத்தி வைத்தது போன்ற அல்லாஹ்வின் சில அத்தாட்சிகள் சிந்திக்க கொடுக்கப்பட்டுள்ளன. அநியாயக்காரர்கள் கல்வி ஞானமில்லாமல், தம் மனோஇச்சைகளையே பின்பற்றுகிறார்கள். மனிதர்களின் தவறான நடவடிக்கையால் தரையிலும் கடலிலும் குழப்பம் பரவி விட்டது. காற்று, மேகம் மற்றும் மழை ஆகிய அல்லாஹ்வின் அத்தாட்சிகளை கவனித்து, அவனது கருணையைப் பற்றி சிந்தியுங்கள்.**

## தராவிஹ் - 17: (ரக்அத் 5 முதல் 8)

### ஸூரா - 30, அர்ரூம்; வசனம்: 20 - 60; பிரிவு: 3 - 6

1. **அல்லாஹ்வின் சில அத்தாட்சிகள் இங்கு குறிப்பிடப்படுகின்றன.** (ஸூரா - அர்ரூம்; பிரிவு: 3)

    a. **அவன் உங்களை மண்ணிலிருந்து படைத்திருப்பதும், பின்பு நீங்கள் மனிதர்களாக பூமியின் பல பாகங்களில் பரவியதும் அவனுடைய அத்தாட்சி.**

    b. **நீங்கள் ஆறுதல் பெறுதற்காக உங்கள் மனைவியரை உங்களிலிருந்தே உங்களுக்காக அவன் படைத்திருப்பதும், உங்களுக்கிடையே பாசத்தையும், பரிவையும் உண்டாக்கியிருப்பதும் அவனுடைய அத்தாட்சிகளில் உள்ளதாகும்.**

    c. **அச்சமும், ஆதரவும் ஏற்படும்படி அவன் உங்களுக்கு மின்னலைக் காட்டுவதும் அவனது அத்தாட்சியாகும்.**

    d. **பிறகு வானத்திலிருந்து மழை பொழியச் செய்து, அதைக் கொண்டு பூமியை உயிர்ப்பிக்கிறான்.**

நிச்சயமாக அதில் சிந்தித்து உணரும் சமூகத்திற்கு அத்தாட்சிகள் இருக்கின்றன.

e. வானமும், பூமியும் அவனுடைய கட்டளையினால் நிலைபெற்று நிற்பதும் அவன் அத்தாட்சியாகும். பின்னர் (மறுமையில்) அவன் உங்களை ஒரே முறை அழைப்பான். அப்போது உடனே நீங்கள் பூமியிலிருந்து வெளிப்பட்டு வருவீர்கள்.

2. வானங்களிலும், பூமியிலும் இருப்பவை எல்லாம் அல்லாஹ்வுக்கே உரியவை. எல்லாம் அவனுக்கே கீழ்படிந்து நடக்கின்றன. (ஸூரா - அர்ரூம்; பிரிவு: 3)

3. எனினும், அநியாயக்காரர்கள் கல்வி ஞானமில்லாமல், தம் மனோஇச்சைகளையே பின்பற்றுகிறார்கள். (ஸூரா - அர்ரூம்; பிரிவு: 4)

4. எந்த இயற்கையோடு மனிதனை அல்லாஹ் படைத்தானோ, அந்த இயற்கையான சத்திய மார்க்கத்தின் மீது உறுதியாக இருப்பீராக! அல்லாஹ்வினுடைய படைப்புகளிலும், அவனது மார்க்கத்திலும் எந்த மாற்றத்தையும் நீங்கள் கொண்டு வராதீர்கள். (ஸூரா - அர்ரூம்; பிரிவு: 4)

5. மனிதர்களின் தவறான நடவடிக்கையால் தரையிலும், கடலிலும் குழப்பம் பரவி விட்டது. அவர்கள் செய்த தவறான நடவடிக்கைகளை அவர்களே சுவைக்க வேண்டுமென்பதற்காக அல்லாஹ் அவ்வாறு செய்கிறான். ஏனெனில், அவர்கள் பாவங்களிலிருந்து மீண்டுவிட வேண்டுமென்பதற்காக. (ஸூரா - அர்ரூம்; பிரிவு: 5)

6. அல்லாஹ் காற்றை அனுப்பி, மேகங்களை ஓட்டி, தான் நாடியவாறு வானத்தில் பரவச் செய்து அதனைத் துண்டுதுண்டாக ஆக்கி, தான் நாடியவர்கள் மீது மழையை பொழிவிக்கின்றான். (ஸூரா - அர்ரூம்; பிரிவு: 5)

7. அல்லாஹ் மேகங்கள் மூலம் தான் நாடியவர்கள் மீது மழையை பொழிவிக்கும்போது அவர்கள் மகிழ்ச்சியடைகின்றார்கள். மழை வரும்முன் அவர்கள் நம்பிக்கையிழந்தவர்களாகவே இருந்தனர். (ஸூரா - அர்ரூம்; பிரிவு: 5)

8. அல்லாஹ் இந்த குர்ஆனில் எல்லா விதமான எடுத்துக்காட்டுகளையும் உங்களுக்கு வழங்கியுள்ளான். நபியே! நீங்கள் அவர்களிடம் எந்த அத்தாட்சியைக் கொண்டு வந்தாலும் கா∴பிர்கள், "நிச்சயமாக நீர் பொய்யராகவே இருக்கின்றீர்" என்றுதான் சொல்வார்கள். (ஸூரா - அர்ரூம்; பிரிவு: 6)

9. "நபியே, நீர் பொறுமையோடிருப்பீராக! நிச்சயமாக அல்லாஹ்வினுடைய வாக்கு உண்மையானதாகும். ஆகவே, உறுதியான நம்பிக்கை இல்லாத இவர்கள் உம்மைக் கலக்கமடையச் செய்ய வேண்டாம்". (ஸூரா - அர்ரூம்; பிரிவு: 6)

## ஒரு பார்வை - பகுதி 3

**லுக்மான் (அலை) தனது மகனுக்கு ஷிர்க்கைத் தவிர்க்கவும், பெற்றோரை மதிக்கவும், எப்போதும் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தவும் அறிவுரை கூறியதை தெரிவித்து ஸூரா லுக்மான் ஆரம்பமாகிறது. லுக்மான் (அலை) தன் மகனுக்கு கூறிய சில அழகான அறிவுரைகள் கொடுக்கப்பட்டுள்ளன. உங்களை அல்லாஹ்விடம் ஒப்படைத்து, இவ்வுலக வாழ்க்கை உங்களை ஏமாற்றி விடாமல் பார்த்துக்கொள்ளுங்கள்.**

## தராவிஹ் - 17: (ரக்அத் 9 முதல் 12)

### ஸூரா - 31, லுக்மான்; வசனம்: 1 - 34; பிரிவு: 1 - 4

1. **அலிஃப், லாம், மீம்! இவை ஞானம் நிறைந்த வேதத்தின் வசனங்களாகும். இது நன்மை செய்வோருக்கு நேர்வழி காட்டியாகவும், ரஹ்மத்தாகவும் இருக்கிறது. அவர்கள் தொழுகையை நிலை நாட்டுவார்கள். ஜகாத்தும் கொடுத்து வருவார்கள். அவர்கள் மறுமையை உறுதியாக நம்புவார்கள். (ஸூரா - லுக்மான்; பிரிவு: 1)**

2. **லுக்மான் (அலை) அவர்களுக்கு அல்லாஹ், ஞானத்தை வழங்கினான் (அவர் அரபகத்தில் வாழ்ந்த மிகச் சிறந்த ஞானி மற்றும் சிறந்த கல்வியாளர்). மேலும் அவர்களிடம், “அல்லாஹ்விற்கு நன்றி செலுத்துங்கள். எவர் நன்றி செலுத்துகிறாரோ அவர் நன்றி செலுத்துவதெல்லாம் தனக்காகத்தான்” என்றும் கூறினான். (ஸூரா - லுக்மான்; பிரிவு: 2)**

3. **லுக்மான் (அலை) தன் மகனிடம், “அல்லாஹ்விற்கு இணைவைக்காதே. நிச்சயமாக இணைவைப்பது, மிகப் பெரும் அநியாயமாகும்” என்று கூறினார்கள். (ஸூரா - லுக்மான்; பிரிவு: 2)**

4. “எனக்கும், உங்களுடைய பெற்றோருக்கும் நன்றி செலுத்துங்கள், ஏனெனில் உங்கள் தாய் பலவீனத்துக்கு மேல் பலவீனமாய் உங்களை கர்ப்பப்பையில் சுமந்து காத்தாள். மேலும் ஈராண்டுகள் உங்களுக்கு பாலூட்டினாள்” என்று அல்லாஹ் மக்களுக்கு உபதேசம் செய்கிறான். (ஸூரா - லுக்மான்; பிரிவு: 2)

5. இணைவைக்க வேண்டுமென உங்களை பெற்றோர் வற்புறுத்தினால் அதற்கு கட்டுப்படவேண்டாம். மற்றபடி எப்போதும் அவ்விருவர்களுடனும் இணக்கமாக நடந்து கொள்ளுங்கள். (ஸூரா - லுக்மான்; பிரிவு: 2)

6. லுக்மான் (அலை) தன் மகனுக்குச் செய்த சில அழகிய உபதேசங்கள்: (ஸூரா - லுக்மான்; பிரிவு: 2)

   a. என்னருமை மகனே! கடுகின் வித்தளவு சிறிய ஒன்று, பாறைக்குள்ளே புதையுண்டு கிடந்தாலும், வானங்களில் அல்லது பூமியில் மறைந்து கிடந்தாலும் அதை அல்லாஹ் கொண்டு வந்திடுவான். நிச்சயமாக அல்லாஹ், நுட்பமானவன்; நன்கறிந்தவன்.
   b. மகனே! தொழுகையை நிறைவேற்று! நல்லதை செய்யும்படி ஏவு! தீமையைத் தடு!
   c. உனக்கு ஏற்படும் துன்பங்களில் பொறுமையோடு இரு! நிச்சயமாக அதுவே தீரச்செயலாகும்.
   d. பெருமையோடு மக்களைவிட்டு உனது முகத்தைத் திருப்பிக்கொள்ளாதே! பூமியில் கர்வத்தோடு நடக்காதே! நிச்சயமாக அல்லாஹ் தற்பெருமையடித்து கர்வங்கொள்கின்ற எவரையும் நேசிக்க மாட்டான்.
   e. உனது நடையில் நடுநிலையைக் கடைபிடி! உன் சப்தத்தை தாழ்த்திக்கொள்! நிச்சயமாக சப்தங்களில் மிக வெறுக்கத் தக்கது கழுதையின் சப்தமாகும்.

7. யார் நற்காரியங்கள் செய்பவராக தன்னை அல்லாஹ்விடம் ஒப்படைத்து விடுகிறாரோ அவர், நிச்சயமாக வலுவான கயிற்றைப் பற்றிப் பிடித்து விட்டவராவார். செயல்களின் இறுதி முடிவு, அல்லாஹ்வின் வசமே உள்ளது. (ஸூரா - லுக்மான்; பிரிவு: 3)

8. நபியே! யார் அல்லாஹ்வை நிராகரிப்பானோ, அவனுடைய நிராகரிப்பு உம்மை கவலையில் ஆழ்த்த வேண்டாம். ஏனென்றால் அவர்கள் நம்மிடமே திரும்பி வரவேண்டியதுள்ளது. அவர்கள் பூமியில் என்ன செய்து கொண்டிருந்தார்கள் என்பதை அப்பொழுது நாம் அவர்களுக்கு அறிவிப்போம். (ஸூரா - லுக்மான்; பிரிவு: 3)

9. பூமியிலுள்ள மரம் முழுக்க பேனாவாக மாற்றி கடல்நீரை மையாக ஆக்கி மேலும் ஏழு கடலளவு மையை ஊற்றினாலும் அல்லாஹ்வின் வார்த்தைகளை (அவனுடைய புகழ், தன்மைகள், பெருமைகள் போன்றவைகளை) எழுதி முடிக்க முடியாது. நிச்சயமாக அல்லாஹ் மிகைத்தவன், ஞானமிக்கவன். (ஸூரா - லுக்மான்; பிரிவு: 3)

10. கப்பல்களைப் பாருங்கள். அது அல்லாஹ்வின் கிருபையால் கடலிலே ஓடுகிறது. அவன் தனது அத்தாட்சிகளை உங்களுக்கு காட்ட வேண்டும் என்பதற்காகத்தான் இவ்வாறு செய்கிறான். (ஸூரா - லுக்மான்; பிரிவு: 4)

11. மலைமுகடுகளைப் போன்ற கடல் அலைகள் அவர்களை சூழ்ந்து மூடிக்கொண்டால், அப்போது அல்லாஹ்வை மட்டுமே வணங்கிய நிலையில் அவனை அழைத்து பிரார்த்தனை செய்கின்றனர். (ஸூரா - லுக்மான்; பிரிவு: 4)

12. ஆனால் அதிலிருந்து அல்லாஹ் அவர்களைக் காப்பாற்றி கரையில் சேர்த்த பின் அதில் சிலர் நடுநிலையாக நடந்து

கொள்கிறார்கள். இன்னும் சிலர் மிகவும் நன்றி கெட்ட சதிகாரர்களாக உள்ளனர். (ஸூரா - லுக்மான்; பிரிவு: 4)

13. இவ்வுலக வாழ்க்கை உங்களை ஏமாற்றி விடவேண்டாம். ஏமாற்றுக்கார ஷைத்தானும், அல்லாஹ் விஷயத்தில் உங்களை ஏமாற்றி விடவேண்டாம். (ஸூரா - லுக்மான்; பிரிவு: 4)

14. எந்த உயிரும், தான் நாளை என்ன சம்பாதிக்கும் என்பதை அறியாது. எந்த உயிரும் தான் எந்த இடத்தில் மரணிக்கும் என்பதையும் அறியாது. நிச்சயமாக அல்லாஹ் அனைத்தையும் நன்கறிந்தவன்; நுட்பம் மிக்கவன். (ஸூரா - லுக்மான்; பிரிவு: 4)

## ஒரு பார்வை - பகுதி 4

**யார் அல்லாஹ்வுக்காக ஸஜ்தா செய்து வீழ்ந்து, தமது இறைவனைப் புகழ்வார்களோ அவர்களே அல்லாஹ்வின் வசனங்களின் மீது நம்பிக்கை கொண்டவர்கள் என ஸூரா அஸ்ஸஜ்தா விளக்குகிறது. மேலும் அவர்கள் பெருமையடிக்கவும் மாட்டார்கள். நிராகரிப்பவர்களைப் பொறுத்தவரை, தாங்கள் செய்த தவறுகளை மிகவும் தாமதமாக மறுமை நாளில் உணர்ந்து கொள்வார்கள். மேலும் அவர்கள் பெரும் தண்டனையை எதிர்கொள்ள வேண்டியதிருக்கும்.**

## தராவிஹ் - 17: (ரக்அத் 13 முதல் 16)

### ஸூரா - 32, அஸ்ஸஜ்தா; வசனம்: 1 - 30; பிரிவு: 1 - 3

1. **அலிஃப், லாம், மீம்! அகிலங்களின் இறைவனிடம் இருந்து இவ்வேதம் அருளப்பட்டுள்ளது என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை. (ஸூரா - அஸ்ஸஜ்தா; பிரிவு: 1)**

2. **அல்லாஹ்வின் அத்தாட்சிகள் நினைவு கூறப்பட்டால், யார் அவனுக்காக ஸஜ்தா செய்து வீழ்ந்து, தமது இறைவனைப் புகழ் பாடுவார்களோ அவர்களே அல்லாஹ்வின் வசனங்களின் மீது நம்பிக்கை கொண்டவர்கள். மேலும் அவர்கள் பெருமையடிக்கவும் மாட்டார்கள். (ஸஜ்தா - 10) (ஸூரா - அஸ்ஸஜ்தா; பிரிவு: 2)**

3. **அவர்களுடைய விலாக்களைப் படுக்கைகளிலிருந்து உயர்த்தி (தூக்கத்தைத் துறந்து), அவர்கள் தங்களுடைய இறைவனை அச்சத்தோடும், நம்பிக்கை ஆர்வத்தோடும் பிரார்த்தனை செய்வார்கள். மேலும் நாம் அவர்களுக்கு அளித்ததிலிருந்து (தானமாக) செலவும் செய்வார்கள். (ஸூரா - அஸ்ஸஜ்தா; பிரிவு: 2)**

4. **அவர்கள் செய்த நற்செயலுக்கு கூலியாக அவர்களுக்கென மறைத்து வைக்கப்பட்டிருக்கும் கண் குளிர்ச்சி தரும் பரிசுகள்**

என்னவென்பதை யாரும் அறியமாட்டார்கள். (ஸூரா - அஸ்ஸஜ்தா; பிரிவு: 2)

5. எவர்கள் பாவங்கள் செய்தார்களோ அவர்கள் நரகில் தள்ளப்படுவார்கள். அதிலிருந்து அவர்கள் வெளியேற நினைக்கும் போதெல்லாம், மீண்டும் அதிலேயே தள்ளப் படுவார்கள். "நீங்கள் எதை பொய்யென கூறி வந்தீர்களோ, அந்த நரகவேதனையை சுவையுங்கள்" என்று அவர்களுக்கு சொல்லப்படும். (ஸூரா - அஸ்ஸஜ்தா; பிரிவு: 2)

6. அவர்கள் பாவங்களிலிருந்து நன்மையின்பால் திரும்ப வேண்டுமென்பதற்காக, பெரிய வேதனைக்கு முன்னதாக (இவ்வுலகில்) அற்ப வேதனையை அல்லாஹ் அவர்களை அனுபவிக்கும்படிச் செய்வான். (ஸூரா - அஸ்ஸஜ்தா; பிரிவு: 2)

7. மேலும் காஃபிர்கள், "நீங்கள் உண்மை சொல்பவர்களாக இருந்தால், யுகமுடிவு நாள் எப்போது வரும்" என்று கேட்கிறார்கள். (ஸூரா - அஸ்ஸஜ்தா; பிரிவு: 3)

8. நபியே! யுகமுடிவு நாளில் காஃபிர்கள் ஈமான் கொள்ள நினைத்தால் அது பலனளிக்காது. மேலும் அவர்களுக்கு அவகாசமும் கொடுக்கப்பட மாட்டாது என்று கூறுவீராக! எனவே நீர் அவர்களைப் புறக்கணித்து (அந்நாளை) எதிர்பார்ப்பீராக! நிச்சயமாக, அவர்களும் அதை எதிர்பார்க்கக் கூடியவர்கள்தான். (ஸூரா - அஸ்ஸஜ்தா; பிரிவு: 3)

## ஒரு பார்வை - பகுதி 5

முஃமின்கள் தங்கள் வளர்ப்பு மகன்களை நியாயமான முறையில் நடத்தவும், இரத்த உறவுகளை பேணிக்கொள்ளவும் அறிவுறுத்தப்படுகிறார்கள். அகழிப் போரின் போது, அல்லாஹ் எதிரிகளுக்கு எதிராக கடுமையான காற்றை அனுப்பி, அவர்களை பின்வாங்கச் செய்து, முஸ்லிம்களைப் பாதுகாத்தான். இந்தப் போரின் போது முஸ்லிம்கள் அச்சத்தாலும், சந்தேகத்தாலும் சோதிக்கப்பட்டனர். ஆனால், இறுதியில் அல்லாஹ் அவர்களுக்கு வெற்றியைத் தந்தான்.

## தராவிஹ் - 17: (ரக்அத் 17 முதல் 20)

### ஸூரா - 33, அல்அஹ்ஜாப்; வசனம்: 1 - 27; பிரிவு: 1 - 4

1. நபியே! அல்லாஹ்வையே அஞ்சுவீராக! நிராகரிப்போருக்கும், நயவஞ்சகர்களுக்கும் கீழ்படியாதீர். நிச்சயமாக அல்லாஹ் யாவற்றையும் நன்கறிபவன்; ஞானமிக்கவன். (ஸூரா - அல்அஹ்ஜாப்; பிரிவு: 1)

2. நபியே! அல்லாஹ்வையே நீர் முற்றிலும் நம்புவீராக! பாதுகாவலனாக இருக்க அவனே போதுமானவன். (ஸூரா - அல்அஹ்ஜாப்; பிரிவு: 1)

3. நீங்கள் தத்தெடுத்த வளர்ப்புப் பிள்ளைகளை அவர்களது சொந்த தகப்பனாரின் பெயரோடு சேர்த்து அழையுங்கள். அவர்களுடைய தகப்பனார் யாரென்று உங்களுக்கு தெரியவில்லையெனில், அப்போது மார்க்கத்தில் அவர்கள் உங்களுடைய சகோதரர்களாகவும், நண்பர்களாகவும் இருக்கின்றனர். (ஸூரா - அல்அஹ்ஜாப்; பிரிவு: 1)

4. முஃமின்களுக்கு, அவர்களுடைய உயிர்களை விட நபிதான் முதன்மையானவர் ஆவார். நபியின் மனைவியர்கள், அவர்களுக்கு அன்னையர் ஆவர். (ஸூரா - அல்அஹ்ஜாப்; பிரிவு: 1)

5. அல்லாஹ்வின் வேதத்தின் சொத்துப் பிரிவு சட்டத்தைப் பொருத்தவரை நெருங்கிய உறவினர்கள்தான், மற்ற முஃமின்களை விடவும், முஹாஜிர்களையும் விடவும் (அதாவது மதீனாவுக்கு ஹிஜ்ரத் செய்தவர்களை விடவும்), சிலரை விட சிலர் முன்னுரிமை பெற்றவர்கள் ஆவர். (ஸூரா - அல்அஹ்ஜாப்; பிரிவு: 1)

6. முஃமின்களே! அகழிப் போர் நடைபெற்ற போது அதில் கிடைத்த அல்லாஹ்வின் வெகுமதிகளை நினைத்துப் பாருங்கள். (ஸூரா - அல்அஹ்ஜாப்; பிரிவு: 2)

*பின்னணி: அகழ்ப் போர் முஸ்லீம்களின் மூன்றாவது பெரிய யுத்தம். அது உஹது போருக்குப்பின் இரண்டு ஆண்டுகளில் நடந்தது. குறைஷிகளின் பல்வேறு கோத்திரங்களுடன் யூதக் குழுவினர்களும் சேர்ந்து சுமார் பத்தாயிரம் படை வீரர்கள் மதீனாவை நோக்கி முஸ்லிம்களுடன் போரிட வந்தனர். அவர்கள் மதீனாவை நெருங்குவதற்கு முன்னரே நபி (ஸல்) அவர்கள் ஒரு பெரும் அகழியை மதீனாவின் வடமேற்காக சுமார் ஆறு நாட்களில் உருவாக்கினார்கள். மேலும் சுமார் 3000 படை வீரர்களுடன் நபியவர்கள் பகைவரை எதிர்கொள்ள தயாரானார்கள். அவர்களுக்கு பின்புறம் 'சல்உ' மலையும், மற்றொரு புறம் அடர்ந்த பேரீச்சம்பழ தோட்டங்களும் இருந்தன. அதனால் பகைவர்களால் எந்தப் பக்கமும் தங்க முடியவில்லை. அவர்களுக்கு இருந்த ஒரே வழி தோண்டப்பட்ட அகழி ஒன்றே! அதனால் அவர்கள் சில நாட்களாக அங்கேயே அந்த கடுங்குளிரில் தங்க வேண்டியதாயிற்று. ஆனால் அதற்கு அவர்கள் தயாராக இல்லை.*

7. அல்லாஹ் கடும் காற்றை அனுப்பியும், கண்ணுக்குத் தெரியாத படைகளை அனுப்பியும் எதிரிகளை ஓடச் செய்தான். (*இந்த முற்றுகை சுமார் 25 நாட்களுக்கு மேல் இருந்தது. ஒருநாள்*

*இரவு கடுமையான பலத்த காற்றுடன் இடியும், மின்னலும் அவர்களது கூடாரத்தை தாக்கியது. எதிரிகளால் அதை தாக்குப்பிடிக்க முடியவில்லை. அதனால், அவர்கள் திரும்பி சென்றுவிட்டனர்).* **(ஸூரா - அல்அஹ்ஜாப்; பிரிவு: 2)**

8. **முஸ்லீம்கள் மீது எதிரிகள் படையெடுத்து வந்தபோது, முஸ்லீம்களின் பார்வைகள் நிலைகுத்தி, இதயங்கள் தொண்டைகளை அடைத்தவாறு திணறி நின்றனர். அப்போது அவர்கள் அல்லாஹ்வைப் பற்றிப் பலவாறாக எண்ணினார்கள். அப்போதுதான் இறைநம்பிக்கையாளர்கள் சோதனைக்கு ஆளாக்கப்பட்டனர். கடுமையான அதிர்ச்சிக்கு ஆளாக்கப்பட்டனர். (ஸூரா - அல்அஹ்ஜாப்; பிரிவு: 2)**

9. **போரின் போது நயவஞ்சகர்கள், அல்லாஹ்வின் மீது தவறான எண்ணம் கொண்டு போரிலுள்ளவர்களிடம், "நீங்கள் நீண்ட நேரம் இங்கு தாக்குப் பிடிக்க முடியாது" என்று சொல்லிக் கொண்டிருந்தனர். மேலும் அவர்களில் ஒரு பிரிவினர், "எங்களுடைய வீடுகள் பாதுகாப்பில்லாமல் இருக்கிறது" என்று கூறி வெளியேறிச் செல்ல நபியவர்களிடம் அனுமதி வேண்டினர். அவர்களது எண்ணமெல்லாம் போர்களத்திலிருந்து தப்பி ஓடுவதுதான். (ஸூரா - அல்அஹ்ஜாப்; பிரிவு: 2)**

10. **புற முதுகு காட்டி ஓடியவர்கள் அவநம்பிக்கையின் விளிம்பில் உள்ளனர். அல்லாஹ் அவர்களுக்கு ஒரு கெடுதலை தர நாடினால் அதிலிருந்து அவர்களை யார் பாதுகாப்பார்? அல்லது அருள் புரிய நாடினால் அதைத் தடுப்பது யார்? அல்லாஹ்வையன்றி வேறு யாரையும் பாதுகாவலனாகவும், உதவியாளனாகவும் அவர்கள் காணமாட்டார்கள். (ஸூரா - அல்அஹ்ஜாப்; பிரிவு: 2)**

11. **அல்லாஹ்வின் மீதும், இறுதி நாளின் மீதும் ஆதரவு வைத்து, அல்லாஹ்வை அதிகம் தியானிப்போருக்கு நிச்சயமாக**

நபியவர்களிடம் ஒரு அழகிய முன்மாதிரி உண்டு. (ஸூரா - அல்அஹ்ஜாப்; பிரிவு: 3)

12. இந்த அனைத்து சோதனைகளும் எதற்கென்றால், அல்லாஹ், உண்மையாளர்களுக்கு அவர்களின் உண்மைக்கான கூலியைக் கொடுப்பதற்கும், நயவஞ்சகர்களை தண்டிப்பதற்கும் அல்லது அவன் நாடினால் அவர்களது பாவமன்னிப்பை ஏற்றுக்கொள்வதற்கும்தான். நிச்சயமாக அல்லாஹ் மன்னிக்க கூடியவனாகவும், கிருபையாளனுமாக இருக்கின்றான். (ஸூரா - அல்அஹ்ஜாப்; பிரிவு: 3)

13. அல்லாஹ் காஃபிர்களை அகழ்ப் போரின் போது புறமுதுகாட்டி ஓட வைத்தான். எதிரிகளுடன் போரிட, முஃமின்களுக்கு அல்லாஹ்வே போதுமானவன். (ஸூரா - அல்அஹ்ஜாப்; பிரிவு: 3)

14. அல்லாஹ் பனூகுரைளாவைச் சேர்ந்தவர்களை அவர்களின் கோட்டை கொத்தளங்களிலிருந்து இறக்கினான். (அவர்கள் மதீனாவிலுள்ள யூதர்கள். நபியவர்களிடம் செய்து கொண்ட ஒப்பந்தத்தை அகழ்ப் போரின்போது முறித்து, எதிரிகளுக்கு அவர்கள் உதவி செய்தனர்). அவர்களில் சிலரை நீங்கள் கொன்று விட்டீர்கள். மேலும் சிலரை நீங்கள் சிறை பிடித்தீர்கள். (ஸூரா - அல்அஹ்ஜாப்; பிரிவு: 3)

15. இவ்வாறே அவர்களுடைய நிலங்களுக்கும், வீடுகளுக்கும், சொத்துக்களுக்கும் நீங்கள் இதுவரை சென்றிராத நிலப்பரப்புக்கும் உங்களை வாரிசுகளாக ஆக்கி விட்டான். அல்லாஹ் எல்லாப் பொருட்கள் மீதும் சக்தியுடையவன். (ஸூரா - அல்அஹ்ஜாப்; பிரிவு: 3)

---